**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 346/2022**

**Witness PW 1**

பெயர் இலக்கியா க/பெ பாபு

இன்று (25.02.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் திருமணம் செய்துள்ளது எந்த ஊர் என்றால் வளவனூர். எனது பெற்றோர் எந்த ஊர் என்றால் பன்ருட்டி. எந்த வருடம் எனக்கு திருமணம் நடந்து வளவனூர் வந்தேன் என்றால் 2006. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் வீட்டில் தான் இருக்கிறேன். எனக்கு மாத வருவாய்க்கு தொழில் எதாவது செய்கிறேனா என்றால்இல்லை. எனக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் வளவனூர் IOB வங்கியில் கணக்கு உள்ளது. என்னுடன் யார் யார் வசித்து வருகிறார்கள் என்றால் எனது கணவர் மற்றும் மாமனார், மாமியார். எனது மாமியார் பெயர் கல்யாணி. எனது மாமியார் கல்யாணி மகளிர் சுயஉதவி குழு வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான். எவ்வளவு நாளாக நடத்தி வருகிறார் என்றால் நான் திருமணம் ஆகி வருவதற்கு முன்பாகவே நடத்தி வருகிறார். பிரதிவாதி அம்சா என்பவர் எனது மாமியார் நடத்திவந்த சுயஉதவி குழுவில் ஒரு உறுப்பினராக இருந்தார் என்றால் சரிதான். எனது மாமியார் நடத்தி வந்த சுயஉதவி குழுவில் பிரதிவாதி அவ்வப்போது கடனாக பெற்று திருப்பி செலுத்துவது வழக்கம் என்றால் அது எனக்கு தெரியாது. எனது மாமியார் கல்யாணி ஊரில் வட்டிக்கு பணம் கொடுத்து வசூல் செய்பவர் என்றால் சரிதான். பிரதிவாதி அம்சா என்பவர் எனது மாமியாரிடம் வட்டிக்கு கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கடனை பைசல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி கடனை செலுத்தாத போது எனது மாமியார் பிரதிவாதி வீட்டிற்கு சென்று பிரச்சனை செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. எனது மாமியார் கல்யாணி சாந்தி (எ) சாந்தா என்பவரை வைத்து பிரதிவாதி மற்றும் அவரது கணவர் மீது ரூ. 3,50,000/- கடன் தர வேண்டுமென

வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது . அந்த வழக்கு விழுப்புரம் இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றம் அ .வ எண். 262/2012 என்று தாக்கல் செய்யப்பட்டு அதில் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது . அந்த தீர்ப்பாணை படி ரூ. 5,12,000/- வசூல் செய்ய நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது . அந்த வழக்கில் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டை ஜப்தி செய்து வைக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது . சலீமா பானு என்பவரால் பிரதிவாதி மீது அடமான கடன் வழக்கு விழுப்புரம் முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அ .வ எண் 631/2018 தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது . பிரதிவாதி நான் வழக்கு தாக்கல் செய்தபோது அவரது ஆட்சேபனை எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் . பிரதிவாதியின் கணவர் பெயர் கணேசன் . அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான் . தாவா பிராமிசரி நோட்டில் வருவாய் வில்லை (Revenue Stamp) மீது ம் அதற்கு கீழாகவும் (F. Amsa) என்று கையெழுத்து போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . பிரதிவாதி அந்த கையெழுத்து போடவில்லை என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் . பிராமிசரி நோட் உள்ளடக்கம் நீல நிற மையினால் நிரப்பப்பட்டும் , கையொப்பம் மட்டும் கருப்பு நிற மையினால் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . தாவா பிராமிசரி நோட்டில் கைரேகை என்று எழுதப்பட்டுள்ள இடத்தில் கைரேகை இடப்படவில்லை என்றால் சரிதான் . சாட்சிகள் என்ற இடத்தில் ஒரு கையொப்பம் மட்டும் தான் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அந்த சாட்சி கையொப்பம் கருப்பு நிற மையினால் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . யார் சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் எனது மாமியார் கல்யாணி . தாவா பிராமிசரி நோட்டில் எழுதியதும் சாட்சி என்ற இடத்தில் பெயர் விலாசம் மட்டுமே எழுதப்பட்டுள்ளது கையொப்பம் எதுவும் போடப்படவில்லை என்றால் சரிதான் . நான் சொல்லும் தேதி 02.07.2021 தேதியில் பிரதிவாதி என்னிடம் பணம் ரூ . 7,00,000/- கடன் வாங்கவில்லை பிராமிசரி நோட் எதுவும் கையெழுத்து இடவில்லை என்றால் சரியல்ல . பிரதிவாதியின் கையெழுத்தினை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி கருத்துரை பெற எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்றால் இல்லை .எனது மாமியார் கல்யாணி என்பவர் பிரதிவாதியின் சொத்தை ஜப்தி செய்ய வேண்டுமென்பதற்காக என் மூலமாக தாவா பிராமிசரி நோட்டை போர்ஜரியாக தயாரித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . வழக்கு தாக்கல்

செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் அது நியாபகமில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்படவில்லை அவ்வாறு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்திருந்தால் பிரதிவாதி உரிய பதில் அறிவிப்பினை கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல . பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையது இல்லை என்பதால் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-A. Tamilselvan)
I Additional Subordinate Judge,
Villupuram